# தூதன்

தூதன்-25 ஏப்ரல் 2016 தூது-4

The Bible is the only book whose author is always present when one reads it.



உம்முடைய கிரியைகளையெல்லாம் தியானித்து,
உம்முடைய செயல்களை யோசிப்பேன் என்றேன். சங்கீதம் 77:12

## தென் இந்தியத் திருச்சபை
## தமிழ் சபை - துபாய்

Private Circulation only

# தென் இந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 02 |
| ஆயரம்மா மடல் | 05 |
| செயலர் மடல் | 07 |
| ஆராதனை பாடல்கள் | 09 |
| உயிர்த்தார் மக்கள் பாவம் தவிர்த்தார் | 10 |
| நீங்கள் கிறிஸ்தவரா... | 11 |
| புறா | 12 |
| தெரிந்த சத்தியம் தெரியாத உண்மை | 14 |
| What is Easter | 17 |
| திருச்சபை ஜெபநாள் | 18 |
| வேதாகம பெண்கள் | 20 |
| தெரிந்து கொள்வோம் | 22 |
| வேதவினா போட்டி | 24 |
| Young Reader's Column | 26 |
| பெண்ணே எழுந்திரு | 28 |
| Health Tips | 30 |
| Birthday Celebrants | 32 |
| Wedding Anniversary Celebrants | 34 |



P.O.Box: 8785, Dubai. Ph: 04-2824696, Fax: 04-2826162, Mob: 050-5533645
Website: www. csitamilparishdubai.com,  E-mail: csitapar@emirates.net.ae

# சபை போதகர் மடல்

"…..கடவுள் ஞானிகளை வெட்கப்படுத்த, மடமை என உலகம் கருதுபவற்றைத் தேர்ந்து கொண்டார்…." (1 கொரி.1:27)

கிறிஸ்துவுக்குள் எனதருமை விசுவாசிகளே,

மரித்துயிர்த்தெழுந்து என்றும் வாழ்கிற ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் புதியமாத நல்வாழ்த்துக்கள். ஏப்ரல் மாதம் முதல் நாளை உலகம் முட்டாள்கள் தினமாகக் (All Fools Day) கொண்டாடுகிறது. இது வெறும் வேடிக்கை நிகழ்ச்சி மட்டுமல்ல. உலகத்திற்குப் பின்னே சென்று சீரழிந்து கொண்டிருக்கும் மனுக்குலத்திற்கு மிகவும் அவசியமான நகைச்சுவை உணர்வை ஏற்படுத்தி, பாரமுள்ள மனங்களை இலேசாக மாற்றுகிற சிறப்புள்ள நாளாக, மற்றவர்களின் மனதைப் புண்படுத்தாமல் சிறுசிறு ஏமாற்று வேலைகளைச் செய்து, நகைச்சுவைகளைச் சொல்லி, அவர்களைச் சிரிக்க வைத்துத் தானும் அதன் வழியே மகிழ்கிற ஒரு கொண்டாட்டமே இந்நன்னாளாகும். பல நூற்றாண்டுகளாய் உலகமெங்கும் பாசத்துடன் பரவிவரும் இந்நாளில் ஒருவர் மற்றவரை "ஏப்ரல் முட்டாளே!" (April Fool) என்று ஏமாற்றி, வித்தை காட்டி, மனதை இலேசாக்கி, நகைச்சுவை உணர்வை ஊட்டி மகிழ்விக்கிற உணர்வுதான் இந்நாளின் சிறப்பு. இல்லாத ஒன்றை இருப்பதாகக் காட்டித் தேடவைக்கும் செயல் அதிக நகைச்சுவையை ஏற்படுத்தும்.

இங்கிலாந்தில் தொழிற்புரட்சி ஏற்பட்ட காலத்தில் தோன்றிய கவிஞர்களுள் ஒருவரான Alexander Pope என்பவர் தம் நையாண்டிக் கவிதை ஒன்றில் இவ்வாறு வரைகிறார்.

*"It's better to be a Witty Fool than a Foolish Wit."* இந்த ஒரு வரிக்குப்பின் ஓராயிரம் அர்த்தங்கள் மறைந்து கிடக்கின்றன. Wit என்பது அறிவுசார்ந்த அல்லது சிந்திக்கத் தூண்டும் நகைச்சுவையாகும். உலகையே சிரிக்கவைத்து சிந்திக்க வைக்க ஒரு மனிதன் தன்னை முட்டாளாக்கிக் கொள்வானானால் அது ஒரு நல்ல நோக்கத்திற்காகவே (உம். சார்லி சாப்ளின்). ஆனால் ஒருவர் தன்னை ஓர் அறிவாளி என்று எண்ணி, சுயநலமான, பெருமையான, அருளைவிட பொருளை மையமாக வைத்து பயனற்ற சிந்தனைகளை சிந்தித்து, செயல்பாடுகளை வெளிப்படுத்திக் கொண்டிருப்பது எத்துனை பெரிய முட்டாள்தனம்! மாறிவரும் இன்றைய உலகின் மனுக்குலச் செயல்பாடுகளும், சிந்தனைகளும் அவ்வாறே இருக்கின்றன. அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி, கலாச்சார பண்பாடு முன்னேற்றம், நவநாகரீக வளர்ச்சி, செழுமை மற்றும் பணத்திற்குப் பின்னான தீராத தாகம்,

சமய, வர்க்க வகுப்புவாத அடிப்படை வாதங்களைச் சார்ந்த தீவிர பக்தி போன்றவைகள் மானுடத்தைச் சீரழிக்கும் அடையாளங்களேயன்றி முன்னேற்றத்திற்கானவைகளல்ல. இவைகளின் பின்னே அறிவுத் தெளிவுடன் முன்னேறுகிறோம் என்றெண்ணி வாழ்வியலின் அடிப்படையிலான அன்பு, சகோதரத்துவம், பகிர்வு, தியாகம், விட்டுக்கொடுத்தல், இசைவு, இணக்கம், சமத்துவம், அமைதி, இரக்கம் போன்ற இறைப்பண்புகளை அறிந்தும் கொஞ்சம் கொஞ்சமாய் இழந்து வருவது எத்துனை பெரிய முட்டாள்தனம்!

ஆகவே, திருமறையில் தூய பவுலடிகளாரின் கூற்றுப்படி “கடவுள் ஞானிகளை வெட்கப்படுத்த மடமையானவைகளைத் தெரிந்து கொள்கிறார்” உலகத்தையும், இறைவனையும், பக்தியையும், வாழ்வியலையும், அதிகமாய்த் தெரிந்து, புரிந்து, அறிந்துகொண்டேன் என்ற எண்ணத்தில் சுயநலமாய், தற்பெருமையாய், பகட்டாய் மாறிப்போன ஞானிகளை ஆண்டவர் தெரிந்துகொள்ளாமல், தன்னைத் தாழ்த்தி, தற்பரிசோதனை செய்து, தன்நிலை உணர்ந்து, தன்னை ஒரு மடமையான, இயலாமையான நிலையில் இறைத்திருமுன் உணர்கிறவர்களைத் தெரிந்துகொள்கிறார்.

இறைத்தெரிவின் இரகசியத்தை, ‘நாம் இனிக் குழந்தை பெற இயலாது என்ற நிலையிலிருந்த ஆபிரகாம்-சாராள் தெரிவில், திக்குவாயும் மந்தவாயும் கொண்டு பேச்சாற்றலற்ற மோசேயின் தெரிவில், ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்த பச்சிளம் பாலகன் தாவீதின் தெரிவில், அறியாப் பருவத்திலிருந்த எரேமியாவின் தெரிவில், காட்டத்திப் பழங்களைப் பொறுக்கிக்கொண்டிருந்த எளியவன் ஆமோசின் தெரிவில், உலகமே வெறுத்து ஒதுக்கின மகதலேனா மரியாளின் தெரிவில், கன்னிகழியாமல் கர்ப்பவதியான மரியன்னையின் தெரிவில், மீன்பிடித்தொழில் செய்துவந்த படிப்பறிவற்ற சீடர்களின் தெரிவில், தன் உலக மேட்டிமைகளையெல்லாம் குப்பையாக எண்ணித் தன்னைத் தாழ்த்திய அகாலப்பிறவி பவுலின் தெரிவில்’ காணமுடிகிறது.

அப்படியாயின் நம் நிலை என்ன? ஆண்டவர் நம்மைத் தேர்ந்து கொண்டாரா? எப்படி? நம்மைப் பெரிய ஞானிகளென்றும், தேவபக்தியில் தேறினவர்களென்றும், வேத அறிவில் மிகத் தெளிவுடையவர் என்றும் எண்ணியது போதும்! ஆண்டவர்முன் நம்மைத் தாழ்த்துவோம்! மனுக்குலத்தின் மேட்டிமையான பாவத்திற்குக் கழுவாயாய் வந்து தன்னை சிலுவை மரணம் மட்டும் தாழ்த்தின தியாக பலியாகிய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் சிந்தை, செயல்பாடு நம்மிலும் இருக்கக்கடவது. அவரது சிலுவைத்தியாகம் மற்றும் உயிர்ப்பு நம்மை இறைவனின் தாழ்மையான, எளிமையான, மடமையான தெரிவாக மாற்றட்டும். Let us be transformed as a witty fool for Christ. This is a mystery.

மனித வாழ்வை மாற்றிய புனித வெள்ளி மரணம் பற்றிய ஓர் ஆங்கிலக்கவிதை இதோ:

## OBITUARY TO DEATH

To Many Death is a mystery!
But that's part of the history.
The wise call it an eternal tapastry,
Thus past souls join this sanctuary.
There are some people with bravery,
Who simply live above a century.
One cannot win death with armoury,
Or with any kind of artillery.
But this is still fresh, the scenary,
One human has created victory,
On the cross at mount Calvary,
For those who are in slavery.
He only created a new mystery,
An everlasting faith history.

இறைப்பணியில் ஆயர்
அருள்திரு.S.கிறிஸ்தோபர் ரத்தினசாமி.

## NEW ARRIVALS

"பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்"

Ance Joyanna
D/o.Mr.Ananda Emmanuel Duraisingh & Mrs.Flower Grace
11-02-2016

Baby Girl
D/o.Mr.Shankar S & Mrs.Jaculine Shankar
12-03-2016

Shanrin Oliver
S/o.Mr.Gebin J. Oliver & Mrs.Simie Gold
17-03-2016

Baby Girl
D/o.Mr.Rajeshwararaj & Mrs.John Sheela
29-03-2016

# ஆயரம்மா மடல்

### உயிர்த்த ஆண்டவரை முதலில் கண்ட பெண்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இப்புதிய மாத நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உயிர்த்தெழுந்த ஆண்டவரைக் கொண்டாடுகிற இவ்வேளையில் அவரைப் புரிந்து கொள்ளவும், தூய ஆவியானவரின் ஆற்றலை அனுபவிக்கவும், செயல்படவும், பறைசாற்றவும், மகதலேனா மரியாளின் மூலம் நாம் அழைக்கப்படுகிறோம். "மகதலேனா" என்பது அவரது பிறப்பிடத்துடன் அடையாளப்படுத்தப்படுகிறது. அதற்கு கோட்டை (castle) அல்லது கோபுரம் (Tower) என்று பொருள். நாசரேத்தூரிலிருந்து இயேசுவின் பாலிய பருவத்தையும், வளர்ப்பையும் அடையாளப்படுத்தி, இந்த ஊரைச் சேர்ந்தோர் என்று அடையாளப்படுத்த "நசரேயனாகிய இயேசு" என்று அழைக்கப்பட்டது போன்றுதான் மகதலேனாவின் மரியாள். இயேசுவைச் சந்திப்பதற்கு முன் அம்மரியாள் ஏழு பிசாசுகள் பிடித்திருந்த பாதிக்கப்பட்ட பெண்ணாக இருந்தாள். இஸ்ரவேலிலே எவ்வகை நோய்க்கும் பாவமே காரணம். அது அவர் செய்ததோ அல்லது பெற்றோர் செய்ததோ என்று மட்டுமே கருதப்படும். அப்படிப்பட்ட நிலையிலிருந்த மகதலேனா மரியாள் உயிர்த்த ஆண்டவரை முதலில் தரிசிக்கிற பேறுபெற்றது எப்படி என்று பார்ப்போம்.

**1.குணமாக்கப்பட்ட மகதலேனா மரியாள் (Healed Mary Magdelene):** லூக்காவின் நற்செய்தி நூலில் 8-ம் அதிகாரம் 2-ம் வசனத்தின்படி ஏழு பிசாசுகள் நீக்கப்பட்ட மகதலேனா மரியாள் என்று இவர் அடையாளம் காட்டப்படுகிறார். ஏழு என்பது யூதர்களுக்கு முழு அடையாள எண். ஆகவே பிசாசு அம்மரியாளை முழுவதும் பிடித்திருந்தது என்பதை சுட்டிக்காட்டுவதற்காகவோ அல்லது ஏழு பெரிய பாவங்கள் (Seven Deadly sins) என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகவோ இப்படி சொல்லப் பட்டிருக்கலாம். எப்படியிருப்பினும் பிசாசின் அடிமைத் தனத்திலிருந்து இயேசுவால் விடுவிக்கப்பட்டு அவரை ரபீ என்று அழைத்து பின்பற்றக்கூடிய சீஷியாக இவர் மாற்றப்படுகிறார். நாமும் பின்பற்றுவோமா!

**2. அபிஷேகித்த மகதலேனா மரியாள் (Anointing Mary Magdelene):** மாற்கு 14:9-ன்படி "இந்த நற்செய்தி உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவர் செய்ததும் சொல்லப்படும்" என்ற ஆண்டவர் இயேசுவின் சாட்சியிலே மரியாள் தான் அடக்கம் பண்ணப்படுவதற்கு எத்தனமாக தன் சரீரத்தில் தைலம் பூச முந்திக் கொண்டதாக ஆண்டவர் மெச்சுகிறார். காரணம், மகதலேனா மரியாளுக்கு ஆண்டவரைவிட மேலானவர் வேறு எவரும் இல்லை என்பதும், ஆண்டவரின் அன்பையும், அரவணைப்பையும், மன்னிப்பையும் விட சிறந்த வெகுமதி வேறு எதுவும் இல்லை என்பதும் தெரிந்திருந்ததால் மிக விலையுயர்ந்த நளதம் என்னும் தைலத்தால் ஆண்டவரை அபிஷேகித்து

பாவமன்னிப்பின் நிச்சயத்தோடு புதுவாழ்வு பெற்ற சீஷியாக வெளிப்படுத்தப்படுகிறார். அவர் தன்னால் இயன்றதைச் செய்தார். தம்மையே காணிக்கையாகப் படைத்தார். நாமும் படைப்போமா!

### 3.துணிச்சலான மகதலேனா மரியாள் (Courageous Mary Magdelene):

தன் வாழ்வின் சூழ்நிலையை மாற்றி உயர்ந்த அடையாளம் கொடுத்த ஆண்டவர் மரித்து அடக்கம் பண்ணப்பட்டார் என்ற உண்மை மகதலேனா மரியாளை துக்கத்தில் ஆழ்த்தியது. இருப்பினும் மற்ற சீடர்களைப் போலின்றி பயப்படாமல் அரசு காவல் வைத்த கல்லறைக்குச் சென்று மூன்றாம் நாள் சடங்குகளைச் செய்ய மற்ற பெண்களை வழிநடத்திச் செல்கிறாள். திறக்கப்பட்ட காலியான கல்லறையைக் கண்டதும் ஆண்டவருடைய சரீரத்திற்கு என்ன நேரிட்டதோ என்று அங்கலாய்த்தாலும், தைரியமாக அரசு காவல் போட்ட கல்லறைக்குச் செல்கின்ற துணிச்சலான மரியாளாக நாம் பார்க்கிறோம் (மத்தேயு 27:56,61, 28:1, மாற்கு 16:1, லூக்கா 10, யோவான் 20:1). பின்பு இயேசு உயிர்த்தெழுந்த செய்தியை தைரியமாய்ச் சொன்னார். நாமும் தைரியம் கொள்வோமா!

**4. உயிர்ப்பை முதலில் கண்ட மகதலேனா மரியாள் (Witnessing Mary Magdelene):** மாற்கு 16:9, யோவான் 20:16-ன்படியும் உயிர்த்தெழுந்த ஆண்டவரைத் தரிசித்த பாக்கியவதி இந்த மகதலேனா மரியாள். ஆண்டவரைச் சந்தித்த நாள் முதற்கொண்டு இரட்சிப்புப் பெற்ற எல்லா சூழ்நிலைகளிலும் ஆண்டவரையே சார்ந்து வாழ்ந்தவர். என் ஆண்டவரை யாரோ எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள் என்ற பெரும் கவலையில் நின்ற மரியாளுக்கு உயிர்த்த ஆண்டவர் முதலில் காட்சி தருகிறார். ஆண்டவரை ஏற்றுக்கொண்ட நாள்முதல் இருதயத்தில் சுத்தமுள்ளவராய் இந்த மரியாள் கடவுளைத் தரிசித்ததை நாம் காணமுடிகிறது. மரியாளின் அழுகையைத் துடைத்த ஆண்டவர், பெயர் சொல்லி அழைத்த ஆண்டவர், சீஷியாக ஏற்றுக்கொண்ட ஆண்டவர் இன்று நமக்கும் அவைகளை அருளியிருக்கிறார். நாமும் தரிசிப்போமா!

**5. நற்செய்தி அறிவித்த மகதலேனா மரியாள; (Proclaiming Mary Magdelene):** லூக்கா 24:10, யோவான் 20:18-ன் படியும் ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுந்தார் என்ற நற்செய்தியை முதன்முதலில் அறிவித்தவரும் இந்த மகதலேனா மரியாளே! முந்தினோர் பிந்தினோராயும், பிந்தினோர் முந்தினோராயும் இறைவன்முன் காணப்படுவார்கள் என்ற வேத வாக்கியத்தின்படி பிந்தி அழைப்பு பெற்ற ஆண்டவருடைய சீஷியாக மரியாள் முந்தி அழைக்கப்பட்ட சீடர்களுக்கு உயிர்த்தெழுதலின் நற்செய்தியைக் கொண்டு சென்றது இறைத்திட்டம் அல்லவா? நாமும் ஆண்டவரின் நற்செய்தியை முந்தி அறிவிப்போமா!

திருமதி. தீபா கிறிஸ்தோபர்.
ஆயரம்மா, பெண்கள் ஐக்கிய சங்கத் தலைவி.

# செயலர் மடல்

கர்த்தருடைய பெரிதான கிருபையால் கடந்த மூன்று மாதங்களை ஆசீர்வாதமாக்கிக் கொடுத்து, நான்காவது மாதத்தையும் காணச்செய்த தேவனுக்கு கோடானகோடி நன்றிகளை ஏறெடுக்கிறேன்.

11-03-2016 அன்று பெண்கள் தினம் மிக சிறப்பாக நடந்தேறியது. அந்த நாளில் பெண்களுக்கான Retreat-ம் நடந்தது. அன்றைய தினத்தில் ஆராதனையில் ஆயரம்மா கர்த்தரின் செய்தியை பகிர்ந்துகொண்டார்கள். ஆராதனையைப் பெண்கள் நடத்தி சிறப்பித்தார்கள். ஆயரம்மாவுக்கும், பொறுப்பாளர் திருமதி.புனிதா தாஸ் அவர்களுக்கும் எங்கள் பாராட்டுதலை தெரிவித்துக்கொள்கிறோம்.

11-03-2016 அன்று Youth Retreat-ம் மிகச்சிறப்பாக நடந்தது. Bro.Freddie Joseph அவர்கள் ஆராதனையில் கலந்து பாடல் பாடி சபைமக்களை மகிழ்வித்தார்கள். Youth Retreat முழுவதையும் நடத்தின அவர்களுக்கும் மற்றும் பொறுப்பாளர்கள் Mr.Johnson Daniel Raj, Mrs.Pamila John David அவர்களுக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

Holy Week Service மிகவும் வித்தியாசமான முறையில் சிறப்பாக நடைபெற்றது. திங்கள்கிழமை தமிழ்இசை குழு மூலமும், செவ்வாய்கிழமை Bible Study-ம், புதன்கிழமை ஆயரும், ஆயரம்மாவும் சேர்ந்து கதாகாலட்சேபம் செய்தது மிகவும் சிறப்பாக இருந்தது. இதில் பங்கேற்ற அனைவருக்கும் எங்கள் பாராட்டுதலை தெரிவிக்கிறோம்.

VBS 26-03-2016 அன்று துவங்கி JSS International School-ல் வைத்து மிகவும் சிறப்பாக நடைபெற்றது. 365 பிள்ளைகளுக்கும் மேல் பங்கேற்றனர். இதன் Director Mrs.Subi Kissinger மற்றும் இதன் தொடர்பாக பல வேலைகளில் உதவிசெய்த Bro.Simon அவர்களுக்கும் நன்றி கூறிக்கொள்கிறோம். மேலும் அதைக் குறைவில்லாமல் நடத்தித் தந்த Teachers, Volunteers யாவருக்கும் நன்றி கூறிக்கொள்கிறோம். இதை நடத்தித் தந்த Rev.Victor Prem Kumar குழுவினருக்கும் நன்றி கூறிக்கொள்கிறோம்.

Easter Service-ல் கர்த்தரின் உயிர்த்தெழுந்த செய்தியைப் பகிர்ந்துகொண்ட Rev.Victor Prem Kumar அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறோம். மேலும் மிக அதிகமான இட நெருக்கடி மத்தியிலும் சபை மக்களின் ஒத்துழைப்பு பாராட்டுதலுக்கு உரியது. சிறப்பாக இந்த ஆண்டு ஃபுஜைரா கிளைச்சபையில் ஏறக்குறைய 100 பிள்ளைகளும், இராஸ் அல் கைமா கிளைச்சபையில் சுமார் 125 பிள்ளைகளும் பங்குபெற்று பயன்பெற்றனர். நடைபெற இருக்கும் திடப்படுத்தல் ஆராதனைக்காகவும், பிரதமப்பேராயர் வருகைக்காகவும் ஜெபிப்போம்.

சிங் ரத்னம்
செயலர்.

## NEW MEMBERS LIST

| Sl.No. | Name | Mem.No. | Area |
|---|---|---|---|
| 1 | Mr. Anish Elmo J | 2620 | Dubai |
| 2 | Mr. P.Manil Reuben | 2621 | Dubai |
| 3 | Mr. A.Benniameen | 2622 | Dubai |
| 4 | Mr. A.Jebaruban | 2623 | Dubai |
| 5 | Mr. Praveen Kumar | 2624 | Dubai |
| 6 | Mr. M.D.Manoj Kumar | 2625 | Dubai |
| 7 | Mr. J.Issac Praveen Kumar | 2626 | Dubai |
| 8 | Mr. Jenilraj | 2627 | Dubai |
| 9 | Mrs. Rajabai Selvin | 2628 | Dubai |
| 10 | Mrs. Vinola Singh | 2629 | Dubai |
| 11 | Mr. Prabaharan | 2630 | Dubai |
| 12 | Mr. C.John Paul | 2631 | Fujairah |
| 13 | Mr. T.Selvaraja | 2632 | Fujairah |
| 14 | Miss. C.Melitha | 2633 | Fujairah |
| 15 | Mr. Merlin Ramesh | 2634 | RAK |
| 16 | Mr. Vinoth Rajan Rajayyan | 2635 | RAK |
| 17 | Mr. Pradeep Maria Stanislaus | 2636 | RAK |
| 18 | Mr. Stephen | 2637 | RAK |
| 19 | Mr. Joney Manoji | 2638 | RAK |
| 20 | Mr. Joe John Packiyaraj | 2639 | RAK |
| 21 | Mrs.Christina Ravi Rajamanickam | 2640 | RAK |

# ஆராதனை பாடல்கள் – ஏப்ரல் 2016

பாமாலை - கீர்த்தனை

ஆராதனை ஆரம்ப பாடல் : பாமாலை 10 என் நெஞ்சமே
ஆராதனை இறுதி பாடல் : பாமாலை 205 எல்லா நன்மைக்கும்

**01-04-2016**

| | | |
|---|---|---|
| பாமாலை | 9 | எல்லாருக்கும் மா உன்னதர் |
| கீர்த்தனை | 134 | தேன் இனிமையிலும் |
| கீர்த்தனை | 117 | இயேசு என் அஸ்திபாரம் |
| கீர்த்தனை | 187 | கர்த்தரின் பந்தியில் வா |

**08-04-2016**

| | | |
|---|---|---|
| பாமாலை | 153 | ஆ என்னில் நூறுவாயும் |
| கீர்த்தனை | 109 | பாதகன் என் வினைதீர் |
| பாமாலை | 199 | இயேசுவை நம்பி |
| கீர்த்தனை | 7 | எந்நாளுமே துதி |
| கீர்த்தனை | 161 | என்னை ஜீவபலியாய் |
| கீர்த்தனை | 124 | துங்கனில் ஒதுங்குவோன் |

**15-04-2016 திடப்படுத்தல் ஆராதனை**

| | | |
|---|---|---|
| பாமாலை | 16 | போற்றும் போற்றும் |
| பாமாலை | 171 | எப்போதும் இயேசு நாதா |
| கீர்த்தனை | 79 | ஆவியை மழைபோல |
| கீர்த்தனை | 187 | கர்த்தரின் பந்தியில் வா |
| கீர்த்தனை | 164 | தந்தேன் என்னை இயேசுவே |

**22-04-2016**

| | | |
|---|---|---|
| பாமாலை | 44 | இயேசுவே உம்மைத் தியானித்தால் |
| பாமாலை | 140 | ஆராய்ந்து பாரும் கர்த்தரே |
| பாமாலை | 128 | ஆண்டவா பிரசன்னமாகி |
| கீர்த்தனை | 151 | இயேசுவே கிருபாசனப்பதியே |
| கீர்த்தனை | 56 | இயேசுவின் நாமமே |
| கீர்த்தனை | 125 | தேவபிதா எந்தன் |

**29-04-2016**

| | | |
|---|---|---|
| பாமாலை | 5 | உம்மைத் துதிக்கிறோம் |
| பாமாலை | 107 | நிர்ப்பந்தமான பாவியாய் |
| பாமாலை | 135 | உந்தன் சொந்தமாக்கினீர் |
| கீர்த்தனை | 169 | எங்கும் புகழ் இயேசு |
| கீர்த்தனை | 181 | பொக்கிஷம் சேர்த்திடுங்கள் |
| கீர்த்தனை | 160 | உந்தன் சித்தம்போல |

# உயிர்த்தார் மக்கள் பாவம் தவிர்த்தார்

புதைக்கப் பட்டாரா ? விதைக்கப் பட்டாரா ?
உயிர்த்தெழுந்தார் இயேசு !
புதைகுழி உதைவிழ கதைமுடிந்து பறந்ததோ ?
மரணத் தூசு !

இருந்தும் மறந்தா இருந்தார் சுயசக்தி ?
அடக்கி நடந்தார் !
தெரிந்திடும் பழிக்கும் இழிக்கும் முழுஅமைதி
சிலுவையில் மாண்டார்

முப்பத்தி நாலாம் ஆண்டு மத்தியில்
ஒப்பிலா மீட்பு
இப்புவி மக்கள் பாவத்தைப் போக்கையில்
எழுந்தார் இயேசு

உந்து சிந்தை முந்தித் தந்து
ஏந்தினார் சீடரை
என்றும் மக்கள் துக்கம் போக்கும்
சக்தி ஆக்கினார்

எல்லைக் குள்ளே இருக்கச் சொல்லி
அப்போஸ்தலர் எருசலேமில்
எல்லை இல்லா வல்ல மையில்
சாட்சியாக்கி (பூமி)விளிம்பில்

நாற்பது நாட்கள் நெருப்பெனப் பரந்து
உயிர்த்தபின் இயேசு
நாற்பதாம்நாள் நிற்பது ஒலிவமலை உச்சிவந்து
பரமேறினார் இயேசு !

ஆதாரம் : நற்செய்திகள் – அப்போஸ்தலர்
கவிதை எண் : 186
கவிதை ஆக்கம் : மணிமுத்து

# நீங்கள் கிறிஸ்தவரா...

இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான், பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின. 2 கொரிந்தியர் 5:17

ஒரு
மனிதரின்
உடலுக்குள்
உறையும்
உயிராத்மா
உன்னதமான
கர்த்தருடையது
அதை...
ஒருவன்...
உண்டுபண்ணுவதோ
அழிப்பதோ
சாத்தியமல்ல
கர்ப்பத்தின் கனி
கர்த்தரால் வந்தது
எங்கு, யாருக்கு
பிறந்தோம் என்பதும்
அங்கு எப்படி
வாழ்ந்தோம் என்பதும்
எந்த மார்க்கத்தைச்
சார்ந்தோம் என்பதும்
குலம் கோத்திரம்
இவையில்
தாழ்ந்தோம் என்பதும்
இங்கு கேள்வியே
இல்லையப்பா...
கிறிஸ்துவுக்குள்
வந்துவிடு
புது சிருஷ்டி
பெற்றுவிடு
இதோ...
இவர்கள் வாழ்வில்
இருள் இருந்தது
இழிவு இருந்தது
இன்னல் இருந்தது
பழி இருந்தது
பாவம் இருந்தது

இதோ...
இவர்கள்....
இப்போது
இயேசுவுக்குள்
வந்துவிட்டார்கள்
பழையன மறைந்தது
கண்கள் திறந்தது
ஒளி பிறந்தது
அருள் மலர்ந்தது
ஆனந்தம் நிறைந்தது
கிறிஸ்துவுக்குள்
வந்துவிடு
புது சிருஷ்டி
பெற்றுவிடு
மரம்
மனிதனுக்கு மட்டுமல்ல
பறவைக்கும்
பயன் தரும்
ஒரு மரத்தின்
கிளையில்
இருக்கும்
பறவை
கிளை ஒடிந்து
விடுமென்றோ
நாம் மடிந்து
விடுவோமென்றோ
பறவைக்கு
பயமில்லை
பதற்றமில்லை
காரணம்
பறவையின் விசுவாசம்
மரத்தின் மீதல்ல
மாறாக - தன்
சிறகின் மீது

உறுதியான நம்பிக்கை
உள்ளது.
ஆம் அன்பரே
நாமும் நமது
விசுவாசத்தை
சஞ்சலமற்ற
மனதுடன்
நெஞ்சம்
நிறைந்து
இரட்சிப்பின்
கடவுள்
இயேசுவின் மீது
நம்பிக்கை
கொள்வோம்.
இந்த
உபவாச நாட்கள்
அதற்கு
உகந்த நாட்களே
இதயத்தில்
பக்திநெறி
துளிர்விடும்
நாட்களே
இயேசுவின்
அருள் அமுதத்தில்
உலகை
வென்றிடலாம்
உயர்வாய்
வாழ்ந்திடலாம்
இயேசுவுக்குள்
வந்துவிடு
புது சிருஷ்டி
பெற்றுவிடு
இக்கருத்து
வெளிப்பாடு 21-4-ல்
பார்க்கலாம்

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

# புறா

புறாக்கள் மென்மையானவை, இளகிய தன்மை உள்ளவை. சூது வாது அறியாது. கோபப்பட்டு ஒன்றோடொன்று சண்டை செய்யாது. அது கபடற்றது. எனவே இயேசுவானவர், "புறாக்களைப்போலக் கபடற்றவர்களாய் இருங்கள்" என்றார். (மத். 10:16) மேலும் புறாவிற்கு பித்த சுரப்பி கிடையாது. பரிசுத்தத்திற்கு எடுத்துக்காட்டாக உள்ளது. தேவனுடைய ஆலயமாகிய நாம் பரிசுத்தமாய் வாழ அழைக்கப் பட்டிருக்கிறோம். 1பேதுரு 1:16 ல் "நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்" என்று எழுதியிருக்கிறதே. கிறிஸ்தவ சமுதாயத்திற்கு புறா முக்கியமான சின்னங்களில் ஒன்றாக கருதப்படுகிறது. இன்று சமாதானத்தின் சின்னமாக இப்பூவுலகில் கருதப்படுகிறது. ஆதாமின் பரம்பரையில் வந்த நோவாவின் காலத்தில், "தேவன் பூமியைப் பார்த்தார், இதோ அது சீர்கெட்டதாயிருந்தது, மாம்சமான யாவரும் பூமியின்மேல் தங்கள் வழியைக் கெடுத்துக்கொண்டிருந்தார்கள். நான் அவர்களை பூமியோடே அழித்துப் போடுவேன்" என்று தேவன் சொன்னார்(ஆதி. 6:12,13). நாற்பது நாள் இரவும் பகலும் பெருமழை பெய்தது. பூமியின் மேல் நீர் குறைந்து விட்டதா என அறியும்படி நோவா ஒரு புறாவை பேழையிலிருந்து வெளியே விட்டான். அந்த புறா மாலையில் அவனிடத்திற்கு திரும்பி வந்தது. அது கொத்திக் கொண்டு வந்த ஒலிவமரத்தின் ஒரு இலைக் கொத்து அதின் அலகிலிருந்தது. புறா, அதின் அலகில் ஒலிவ இலைகள். இதுதான் இன்றைய உலகில் சமாதானத்தின் சின்னம். இன்றைய சமுதாயத்தின் நிலையும், கிறிஸ்தவ சமுதாயம் உட்பட தீமை நிறைந்து காணப்படுகிறது. பழிக்குப் பழி, இரத்தத்திற்கு இரத்தம், போராட்டம், வெறியாட்டம், தீவிரவாதிகளின் நாசவேலைகள் உலகெங்கும் பெருகியிருக்கிறது. மனிதன் சமாதானத்திற்காக ஏங்கி நிற்கின்ற வேளைகளில் "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன்," (யோவான் 14:27) என்று கூறிய நமதருமை இயேசு கிறிஸ்து, அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே நமக்கு சமாதானத்தை உண்டாக்கி இன்றும் நம்முடன் சமாதானக் காரணராக உயிரோடிருக்கிறார் (கொலோ. 1:20) வேதாகமத்தில் பாவ நிவாரண பலியாகவும், சர்வாங்க தகன பலியாகவும் கொடுக்கப்பட உகந்தது புறாவாகும். இயேசுகிறிஸ்துவோ, நமது பாவங்களுக்காக ஒரே பலியாக தம்மையே செலுத்தி, தம்முடைய சொந்த இரத்தத்தினால் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டு பண்ணினார் (எபி. 9:12,10:10). பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கும் சின்னமாகவும் புறா விளங்குகிறது. "இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது, தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார்" (மத். 3:16). நமக்குள் வாசம் பண்ணுகிற ஆவியானவர், நம்முடைய பாடுகள் வேதனைகள் மத்தியில் மெய் சமாதானம், ஆறுதல் தந்து நம்மை வழி நடத்துகிறார்.

மேலும் புறாவின் தனித்தன்மை என்னவென்றால், அவை ஒருமைப்பார்வை கொண்டவை. சிந்தனையைச் சிதறவிடாமல் ஒரே பொருளை நோக்கும் தன்மையுடையவை. ஏசாயா தீர்க்கதரிசியைப் போல நாமும் தேவாலயத்தில் உயரமும் உன்னதமுமாகிய தேவனைக் காணவேண்டும். இந்த மகிமையான இரட்சகரின் சமூகத்தில் வரும்போது நம்மைச் சுற்றியிருக்கிறவர்களைப் பொருட்படுத்தாமல் இயேசுவின் பாதத்தில் பரிமளத் தைலம் பூசிய மரியாளைப் போல உண்மையாய் அவரை ஆராதிப்போம். பந்தயச் சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள், நாமோ சத்துரு தரும் உலக சிற்றின்பத்தின் மேல் கவனம் வைக்காமல், கண்களை இயேசுவின் மேலேயே பதிய வைத்து இந்த உலக ஓட்டத்தை ஓடி அழிவில்லாத கிரீடத்தை அவர் கரத்திலிருந்து பெற்றுக் கொள்ள சமாதானத்தின் தேவன் தாமே கிருபை செய்வாராக.

புறாவைப் போல சாந்தமாய் நீர் செட்டை விரிப்பீர்
மெய் சமாதானம் ஆறுதல் நற் சீறும் அருள்வீர்
தெய்வாவி, மனவாசராய் வந்தனல் மூட்டுவீர்
உம் அடியாரின் உள்ளத்தில் மா கிரியை செய்குவீர்

-இனிதா மோசஸ்.

## வருந்துகிறோம்

"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்"

நமது சபையைச் சேர்ந்த

Mr. D.Jeevin Maxwell அவர்களின் தாயார்

Mrs.Rathinabai William Dennis அவர்கள் கடந்த 09-03-2016 அன்றும்

Mr.Manoah John Sampath Kumar அவர்களின் தாயார்

Mrs. Manoramah Manoah அவர்கள் கடந்த 14-03-2016 அன்றும்

Mr. Christopher Johnson அவர்களின் தகப்பனார்

Mr. Robert அவர்கள் கடந்த 22-03-2016 அன்றும்

நமது இராஸ் அல் கைமா கிளைச்சபையைச் சேர்ந்த

Mrs. Golden Bamilin Regi அவர்களின் தகப்பனார்

Mr. David Annaraj அவர்கள் கடந்த 10-03-2016 அன்றும்

கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்கள்.

# தெரிந்த சத்தியம்! தெரியாத உண்மை!!

## ஆபிராம்!!!

ஆபிராம் தனது 50-வது வயதில் நோவாவின் வீட்டிலிருந்து, தன்னுடைய தகப்பனாகிய தேராகுவின் வீட்டிற்கு வந்தார். ஆபிராம் தேவனாகிய கர்த்தரை அறிந்திருந்தார். தேவனும் அவரோடே இருந்தார். தேராகு அப்போதும் ராஜாவாகிய நிம்ரோத்திடம் தளபதியாக பணியாற்றியது மட்டுமன்றி, அந்நிய தெய்வங்களையும் பின்பற்றி வந்தார்.

ஆபிராம் தன் தகப்பனுடைய வீட்டில் இருந்த 12 தெய்வங்களையும் அவற்றின் வழிபாட்டு இடத்தையும் கண்டார். அவருடைய கோபம் பற்றியெறிந்தது. உடனே அவர், “தேவனாகிய கர்த்தர் ஜீவிக்கிறவரானபடியால் இவைகள் என்னுடைய தகப்பனுடைய வீட்டில் இருக்கப்போவதில்லை! என்னை உண்டாக்கிய தேவனானவர் இன்னும் மூன்று நாட்களில் இவைகளை அழித்துப் போடுவார்” என்றார்.

பின்பு ஆபிராம் அங்கிருந்து புறப்பட்டு வெளிப்புற முற்றத்தில் தன்னுடைய வேலைக்காரர் மத்தியில் உட்கார்ந்திருந்த, தன் தகப்பனாரிடம் வந்தார். ஆபிராம் அவருக்கு முன்பாக சென்று அமர்ந்து, தன்னுடைய தகப்பனுடைய தகப்பனை நோக்கி, “தகப்பனே, வானத்தையும் பூமியையும், பூமியிலே மனிதர்களையும், என்னையும் உங்களையும் படைத்த தேவன் எங்கே என்று எனக்குச் சொல்லும்” என்று கேட்டார். தேராகு ஆபிராமிடம், “நம்மை உண்டாக்கின நம்முடைய தெய்வங்கள், நம்முடைய வீட்டில்தான் உள்ளனர்” என்றார். ஆபிராம் அவரை நோக்கி, “ஆண்டவரே, நான் அவைகளைப் பார்த்து, ஜெபிப்பதற்கு எனக்கு அவைகளைக் காண்பிக்க வேண்டும்” என்று கேட்டுக்கொண்டார். தேராகு தன்னுடைய வீட்டினுள் அழைத்து வந்தார். அந்த அறை முழுவதும் கல் மற்றும் மரங்களினால் உண்டான விக்கிரகங்களால் நிறைந்திருந்தது. அதில் 12 பெரிய தெய்வங்களும் மற்றவை சிறியவைகளுமாயிருந்தது.

தேராகு தன்னுடைய மகனை நோக்கி, “இவைகளே, உன்னையும், என்னையும், எல்லா மனிதர்களையும், நீ காண்கின்ற இப்பூமியையும் உண்டாக்கிய தெய்வங்கள்” என்று கூறி அவைகளை பணிந்து கொண்டார்.

ஆபிராம் தன் தாயிடம் சென்று, இவ்வுலகையும், எல்லா மனிதர்களையும், உண்டாக்கின தெய்வங்களை தன் தகப்பன் தனக்கு காண்பித்ததாகக் கூறி, அவைகள் தன்னை ஏற்றுக்கொள்ள அவைகளுக்கு சீக்கிரமாக இறைச்சியைச் சமைத்து போஜனமாக படைக்கத் தரவேண்டும் என்று வேண்டிக்கொண்டார்.

உடனே ஆபிராமின் தாய், ஒரு ஆட்டுக்குட்டியை சமைத்து ஆபிராமிடம் கொடுத்தார். ஆபிராம் அதை அந்த தெய்வங்களிடம் கொண்டு வந்து, அவைகளுக்கு முன்பாக வைத்து அவைகளை சாப்பிடக் கொடுத்தான். தேராகு இவைகளை அறியவில்லை. ஆபிராம் அவைகளுக்கு முன்பாக உட்கார்ந்திருந்து, அவைகளிடமிருந்து ஒரு சத்தமும், ஒரு அசைவும் இல்லாததையும், அவைகள் சாப்பிட தங்கள் கரங்களை நீட்டாததையும் உற்று கவனித்தார். ஆபிராம் அவைகளைப் பார்த்து நகைத்து நாம் படைத்த ஆகாரம் அவைகளுக்கு பிடிக்கவில்லை போலும் அல்லது தாம் படைத்தவை அவைகளுக்குப் போதுமானதாக இல்லை போலும், ஆகவே மறுநாளிலே இவற்றை விட சுவையாக, அதிகமாக அவைகளுக்குப் படைப்போம் என்று கூறினார்.

மறுநாள் தன்னுடைய தாயிடம் சென்று தன்னுடைய தெய்வங்களுக்கு அதிகமாகவும் சுவையாகவும் சமைத்துத் தரும்படி கேட்டுக்கொண்டார். இதற்கிணங்க அவருடைய தாய், மூன்று ஆட்டுக்குட்டிகளைச் சமைத்து தன் மகனிடம் கொடுத்தார். தேராகு இதை அறியவில்லை. ஆபிராம் உணவை எடுத்துக்கொண்டு அந்த தெய்வங்களுக்கு முன்பதாக வைத்து, அவைகளுக்கு முன்பாக அன்று முழுவதும் உட்கார்ந்திருந்தார். அவைகள் தங்கள் மறுமொழியைக் கொடுக்கவோ, கரங்களை நீட்டவோ இல்லை.

பின்பு ஆபிராம் கர்த்தருடைய ஆவியாலே எழுந்து, "துன்மார்க்க சந்ததியாரே, அழிவுக்கு நேராக இருதயத்தை சாய்க்கிறவர்களே, சாப்பிடாத, நுகராத, கேட்காத, பேசாத மரங்களினாலும் கற்களினாலும் தெய்வங்களை உடையவர்களே, அவைகள் கண்களிருந்தும் காணாமல், காதுகளிருந்தும் கேளாமல், கைகளிருந்தும் உணராமல், கால்களிருந்தும் நகராமல் அவைகள் தங்களைச் செய்தவர்களைப் போலவே இருக்கிறார்கள்" என்று கூறிக் கொண்டு, ஒரு கோடரியை எடுத்து, அவைகள் எல்லாவற்றையும் அடித்து உடைத்து அவைகளின் முன்பாக இருந்த பெரிய தெய்வத்தின் கையில் கோடரியை கொடுத்துவிட்டு வெளியேறினார்.

தேராகு வெளியே இருந்து வீட்டிற்குள் நுழைந்தார். கோடரியின் சத்தத்தை கேட்ட அவர், கோடரியின் சத்தம் வந்த திசையை நோக்கி வந்தபோது தன்னுடைய தெய்வங்களின் அறையிலிருந்து ஆபிராம் வெளியேறுவதையும், அவைகள் கீழே விழுந்து உடைந்த நிலையிலும் அவைகளின் பெரிய தெய்வத்தின் கையில் கோடரியையும் கண்டார். உடனே அவர் விரைந்து ஆபிராமிடம் வந்தார். ஆபிராம் வீட்டினுள் அமர்ந்திருப்பதை பார்த்தார். கோபத்துடனே அவர் ஆபிராமிடம் சென்று, "நீ என்ன காரியம் என் தெய்வத்திற்கு செய்தாய்?" என்று வினவினார்.

அதற்கு ஆபிராம், “அப்படியல்ல ஆண்டவனே, நான் அவைகளுக்கு போஜனம் படைக்கும்படி அவைகளிடம் சென்றபோது அவைகள் தங்கள் கரங்களை நீட்டி நான் வைத்திருந்த இறைச்சியை எடுக்க வந்தபோது, அந்த பெரிய தெய்வம் கோபம் கொண்டு, கோடரியால் அவைகளை அடித்து உடைத்தது. நீரே அந்த தெய்வத்தின் கையில் கோடரியை பார்த்திருப்பீரே!” என்றான்.

கோபம் கொண்ட தேராகு, “நீ என்னிடம் கதை சொல்லி, பொய் சொல்வதென்ன? அவைகளுக்கு ஜீவனோ, ஆத்துமாவோ, வல்லமையோ இல்லாதபோது நீ சொல்லியவண்ணம் எவ்வாறு அவைகள் செய்ய முடியும்? அவைகளை மரத்தினாலும், கல்லினாலும் உண்டாக்கினவன் நான் அல்லவோ? அதுவுமல்லாமல் அந்த பெரிய தெய்வம் எப்படி அடிக்கமுடியும்? நீயே அவைகளை செய்துவிட்டு அந்த கோடரியை அதன் கையில் கொடுத்துவிட்டாய் அல்லவா?” என்றார்.

உடனே ஆபிராம் தன் தகப்பனை பார்த்து, “அப்படியானால் தாங்கள் அந்த வல்லமையில்லாத தெய்வங்களை வணங்குவதென்ன? அவைகள் உம்மை உண்மையாக விடுவிக்கக்கூடுமோ? உம்முடைய வேண்டுதல்களுக்கு செவிமடுக்குமோ? உம்முடைய சத்துருக்களின் கையினின்று உம்மை விடுதலையாக்குமோ? அவைகள் மரத்தினாலும் கற்களினாலும் உண்டானது அல்லவா? தாங்களும் தங்கள் மக்களும் இப்படிப்பட்ட மரத்தினாலும் கல்லினாலும் செய்யப்பட்ட தெய்வத்தை வணங்க துணிந்ததென்ன?

நம்மையும், வானத்தையும் பூமியையும் உண்டாக்கிய நம்முடைய கர்த்தரை மறந்து இப்படிப்பட்டவைகளைச் சேவித்து பெரிய துன்மார்க்கத்தை நடப்பித்ததென்ன? நம்முடைய முற்பிதாக்கள் இவ்விதமாக பாவம் செய்ததினால் நம் கர்த்தர் ஜலத்தினாலே இப்பூமியை அழித்ததை மறந்ததென்ன? இவைகளைச் சேவித்து நம்முடைய தேவனின் கோபத்தை வருவிக்க எண்ணினீரோ? உம்முடைய ஆத்துமாவுக்கும் இவ்வீட்டிலுள்ளவர்களின் ஆத்துமாவுக்கும் அழிவை வர வைக்கலாமா?” என்று கூறி வேகமாக சென்று அந்த பெரிய தெய்வத்தின் கையிலிருந்த கோடரியை எடுத்து தன் தகப்பனுடைய பெரிய தெய்வத்தை உடைத்து போட்டுவிட்டு வெளியே ஓடிப் போனார் ஆபிராம்.

பின்பு நடந்ததென்ன?.....

(தொடரும்....)

நன்றி: யாசேரின் புத்தகம்

தொகுப்பு: ஷீபா ரெஜினால்ட்

# WHAT IS EASTER?

Oh! Its Easter, Easter, Easter
It is not about chocolate egg hunting
It is about Jesus risen from the dead
When the soldiers trembled as
The angels came down
Rolled the stone down
Sent Satan to drown
Made the Pharisees frown
Claimed his royal crown
And shared his majestic throne
It is not about new dresses
And making so much fusses
It is not about playing
It's all about praying
So, change your life this Easter
And go faster
Faster to Jesus the Master.

Alcina Rosita Jernaus

**Answer sent by the following children for the month of March 2016**

**Age 6 and Above**

1. Alston Samuel Alwin
2. Edliyn Risshona
3. Jebez Jeyasingh
4. Riches Paul Samuel
5. Aaron Darwin Allen
6. Mervin Samuel
7. Jane Christabel Wesley Paul
8. Anne Isabel wesley Paul
9. Driesson Samuel D
10. Jennifer Sherene Paul
11. Jerson Chris Vijil
12. Rithish Joel K.A
13. Jaymen Joseph
14. Jaymie Joseph
15. Edlyn Thayal Durai Rajan

**Age 12 and Above**

1. Joysha Mohan
2. Kashya Sharon Jeyasingh
3. Santhiya Rajan
4. Shamitha Sigamony
5. D.Blessy Mechdalyn
6. Carona Allen

# திருச்சபை ஜெபநாள் 03-04-2016 (முதல் ஞாயிறு)

"கர்த்தாவே, நான் கூப்பிடுகிற சத்தத்தை நீர் கேட்டு,
எனக்கு இரங்கி, எனக்கு உத்தரவு அருளிச்செய்யும்...." சங்கீதம் 27:7

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- இம்மட்டும் நம்மைப் பாதுகாத்து, பராமரித்து இப்புதிய ஆண்டைக் காணச்செய்த தேவனுக்கு நன்றி ஏறெடுப்போம். கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக அவரைத் துதிப்போம்.
- திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறுவோம்.
- பிள்ளைகள் சிறப்பாக முழுஆண்டுத்தேர்வு எழுதி வெற்றிபெறவும், VBS சிறப்பாக நடைபெறவும், சபையைச்சாராத அநேக பிள்ளைகளும் கலந்துகொண்டு கர்த்தரை அறிந்துகொள்ளவும், Youth Retreat, பெண்கள் ஆராதனை, தியான முகாம், பரிசுத்தவார விசேஷித்த ஆராதனைகள், உயிர்ப்பின் பண்டிகை ஆராதனைகள் யாவும் சிறப்பாக நடைபெற கர்த்தர் பாராட்டின கிருபைகளுக்காக

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக,

- மிஷனரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனரி ஸ்தாபனங்களுக்காக
- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக
- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனைக்கு அர்ப்பணமுள்ள செவிலியர் கிடைக்க ஜெபிப்போம்.

## நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- இந்திய நாட்டுக்காக, நாட்டின் தலைவர்கள் மற்றும் அதிகாரம் வகிப்போர் அனைவருக்காகவும், தேசத்தின் வளத்துக்காகவும், வளர்ச்சிக்காகவும், மனிதநேயமும், மத நல்லிணக்கமும் பெருகவும் ஜெபிப்போம். நல்ல இயற்கைச் சூழ்நிலைகள், மழை வளத்துக்காக ஜெபிப்போம்.
- அரபு ஐக்கியக் குடியரசுக்காக, அதன் தலைவர்களுக்காக, இங்கு வாழும் அனைத்துமக்களின் சமாதானத்துக்காக,
- உலகத் தலைவர்களுக்காக, சமாதானத்துக்காக, உலகில் தேவ ஆளுகைக்காக
- சுற்றியுள்ள நாடுகளில் வாழும் மக்கள் அமைதியோடும் சமாதானத்தோடும் வாழ கர்த்தர் கிருபை செய்ய வேண்டிக்கொள்வோம்.

## நமது ஜெப மன்றாட்டுகள்

- இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதல்கள், தேவ ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலம் ஆகிய தேவ கிருபைக்காக,
- நமது குடும்பங்களின் தேவைகளுக்காக, நமது பிள்ளைகளின் கல்விமுன்னேற்றம், மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக, வளமிகு எதிர் காலத்துக்காக,
- வேலை வாய்ப்புக்காய் காத்திருப்போருக்காக, விசா பிரச்சனைகளில் இருப்போருக்காக, சரீர சுகவீனங்களில் சிகிச்சை பெறுவோருக்காக,
